சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.109/2021

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ம் நாள் .வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | வயது | 72 |
| த/பெ | சுப்பைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காட்டுர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஓய்வு பெற்ற ஆசிரியர் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

நான் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் என்றால் உதவி தலைமை ஆசிரியர். நான் எந்த வருடம் ஓய்வு பெற்றேன் என்றால் 31.03.2009 அன்று ஓய்வு பெற்றேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 12 ஆண்டுகளுக்கு முன்னரே நான் ஓய்வு பெற்று விட்டேன் என்றால் சரி தான். பிராது தபசில் 1 முதல் 3 இலக்க சொத்துக்களுக்கு 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரி தான். அது எனக்கு பின்னர் தான் தெரியும். தாவா சொத்தில் எங்களுக்கும் பாகம் உள்ளது என 35 ஆண்டுகளாக வருவாய் துறையில் பட்டா மாற்றம் செய்ய மனு எதுவும் அளிக்க வில்லை என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது எனக்கு தாமதமாக தான் தெரியும். எப்போது தெரியும் என்றால் 2020 - 2021 ஆம் ஆண்டில் தான் தெரியும். அப்போதாவது வருவாய் துறையில் பட்டா சம்மந்தமாக மனு அளித்தேனா என்றால் இல்லை. அவ்வாறு மனு அளிக்காததற்கு கால தாமதமாக எனக்கு தெரிய வந்ததால் தான் மனு அளிக்க வில்லை என கூறுவது தவறு என்றால் சரி யல்ல.

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.